

SRI LANKA

2020

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை


ANNUAL REPORT

ශ්‍රී ලංකා සංචාරක ප්‍රවර්ධන කාර්යාංශය
සංචාරක අමාත්‍යාංශය

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்
சுற்றுலா அமைச்சு

SRI LANKA TOURISM PROMOTION BUREAU
Ministry Of Tourism





வருடாந்த அறிக்கை
2020

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

சுற்றுலா அமைச்சு

உள்ளடக்கம்

வருடாந்த அறிக்கை 2020 - SINHALA 1

வருடாந்த அறிக்கை 2020 - Tamil 65

அறிமுகம், நோக்கு, பணிக்கூற்று 69
ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபை 2020 70
ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபை 2020 71
செயற்பாட்டு மீளாய்வு 72
சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு 72
உலகளாவிய வர்த்தக கண்காட்சிக்காக இலங்கை பங்கேற்றல் 73
வர்த்தக செயற்பாடுகளை நெருக்கமாக்கும் சுற்றுலா 86
இலங்கை வெளிநாட்டு தூது சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயற்பாடுகள் 87
சுற்றுலா இணையத்தள கருத்தரங்கு 92
பொதுமக்கள் தொடர்பாடல் 95
புதிய தயாரிப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் 104
இராமாயண பிரச்சார செயற்பாடுகள் 104
பௌத்த வழிகாட்டல் ஊக்குவிப்பு 105
உள்ளடக்கத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம். 105
புதிய சுற்றுலா தளத்தில் இலவச பிரச்சார செயற்பாட்டிற்கான வாய்ப்புக்கள் 106
விஷேட செயற்திட்டங்கள் 108
இறுதி கணக்கு 111
நிதி நிலை அறிக்கை 112
நிதி செயல்திறன் கூட்டறிக்கை 113
மொத்த சொத்துக்கள் / நிதி மாற்றங்களின் அறிக்கை 114
நிதிப் பாய்ச்சல் கூற்று 115
பட்ஜெட் மற்றும் உண்மை அறிக்கை 116
2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறிப்புகள் 117

வருடாந்த அறிக்கை 2020 - ENGLISH 129

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 193



அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாரர்ளுமன்றத்தில் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தாபிக்கப்பட்டது. இப் பணியகம் தற்போது சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனமாக கொளரவ சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவாக்களின் விடயப்பரப்பில் அடங்குகின்றது.

இப் பணியகம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சுற்றுலாப் பிரயாணிகளுக்கான சுற்றுலா கேந்திர நிலையமாக இலங்கை அரசினால் ஊக்குவிக்கப்படுகின்றது. இலங்கை சுற்றுலா கைத்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு 20 பிரதான சந்தைகளில் செயற்படுவதுடன் நாட்டின் கவர்ச்சிமிக்க இயற்கை வளங்கள், வராலாற்று முக்கியத்துவம் மிக்க சொத்துக்கள், கலை, கட்டக் கலையின் ஆச்சிரியம், கலாச்சார மற்றும் சாகச நிகழ்வுகள் உட்பட சுற்றுலா மேற்கொள்வதற்கா உலகளாவிய சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்படுத்தி இலங்கை அதி உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் சந்தைப்படுத்தல், பொதுமக்கள் இணைப்புக்கள், பரச்சாரம் மற்றும் நிகழ்வுகள் ஆகிய பிரிவுகளின் ஆர்வம்மிக்க குழுக்களின் செயற்பாடுகள் மூலம் ஆண்டு பூராகவும் சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட மூலுபாய மார்க்க சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள நடடிவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நோக்கு

“இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பில் உலகின் அதிஉயரிய மதிப்பீட்டிற்கு உட்பட்ட மிகுந்த பசுமையான தேசமாக இலங்கையை நிலைப்படுத்தி தரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்”.

பணிக்கூற்று

“இலங்கையின் கவர்ச்சி மிக்க கரையோரம், நட்புமிக்க உபசரணை மிக்க மக்கள் மற்றும் இயற்கையின் உயரிய ஆக்கங்கள், கலாச்சார மற்றும் சாகச சுற்றுலா ஊக்குவிப்பின் மூலம் ஆசிய சுற்றலுா கைத் தொழிலின் முன்மாதிரியான சுற்றுலா கேந்திர நிலையமாக இலங்கையை மேம்படுத்தி சுற்றுலாப் பிரயாணிகளின் வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் இயலுமை கொண்ட உலகளாவிய சுற்றுலா பிரயாணிகளின் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கக்கூடிய அதிசிறந்த சுற்றுலா வளங்கள் கொண்ட சுற்றுலா கேந்திர நிலையமாக இலங்கையை நிலைப்படுத்தி இலங்கை சுற்றுலா கைத்தொழிலின் சுற்றுலா கைத்தொழில் தரப்பினருக்கு மற்றும் இலங்கை மக்களுக்கு பயன்கள் கிடைக்கக் கூடிய கணிசமான அந்நியநாட்டு செலாவனியை உழைத்துத் தரக்கூடியதாக மாற்றியமைத்தல்”

2020.12.31 ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபை 2020

பெயர்	பதவி	கால எல்லை
திருமதி கிமாலி பிரனாந்து	தலைவர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திருமதி தம்மிகா விஜசிங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திருமதி உமா நிரன்ஜன்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திரு. ஆர்.எச்.டப். அநுராத குமாரசிரி	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திரு. மஹோன் காரியவசம்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திருமதி அன்ஜலீன் ஒன்டச்சி	பணிப்பாளர் சபை உறுப்பினர்	01ளவ துயரெயசல 2020 - 31ளவ னுநஉநஅடிநச 2020
திரு நலீன் ஜயசுந்தர அவர்கள்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திருமதி யோலந்தி ஆன் ஹன்சென்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திரு. டி. சாமின் விக்ரமசிங்ஹ	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31
திரு. திலீப் முததெனிய	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 ஜனவரி 01 - 2020 டிசம்பர் 31

2020.12.31 ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்

பெயர்	பதவி	கால எல்லை
திருமதி கிமாலி பிரனாந்து	தலைவர்	01.01.2020 njhlf;fk; ,J tiu
திருமதி மடுஹானி பெரேரா	பதில் முகாமைத்துவ பணிப்பாளர்	06.01.2020 njhlf;fk; ,J tiu
திரு. து'ான் விக்கரமசூரிய	பணிப்பாளர் - சந்தைப்படுத்தல்	01.01.2020 njhlf;fk; ,J tiu
திருமதி மடுஹானி பெரேரா	பணிப்பாளர் பொது மக்கள் தொடர்பாடல்	01.01.2020 njhlf;fk; ,J tiu
திரு இந்திரஜித் டி சில்வா	பணிப்பாளர் - வி'ே ட செயற்திட்ட மற்றும் ஆராய்ச்சி	02.03.2020 njhlf;fk; ,J tiu
திரு பிரசாத் தழுவத்தை	பணிப்பாளர் - விழா	01.01.2020 njhlf;fk; ,J tiu
திரு அன்ஜல பிரேமதிலக	பணிப்பாளர் - நிதி	01.01.2020 njhlf;fk; ,J tiu
திருமதி குவேனா கருணாரத்ன	பணிப்பாளர் - மானிட வள மற்றும் நிருவாகம்	01.01.2020 njhlf;fk; 26.02.2020
திரு மிஹிரி லியனாரச்சி	பதில் பணிப்பாளர் - மானிட வள மற்றும் நிருவாகம்	01.03.2020 njhlf;fk; ,J tiu

செயற்பாட்டு மீளாய்வு

சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு

சுற்றுலா பிரயாணிகளின் வருகை சுருக்கம்
2020 – முதலாவது காலாண்டு

2020 ஆம் ஆண்டுக்குள் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையானது முதலாவது காலாண்டிற்கு வரையறுக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் வரை சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை 507,311 ஆகும். கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையான அயல் தேச துணைக் கண்டமான இந்தியாவாகும். ஐக்கிய இராச்சியம், இரசிய கூட்டரசு. ஜேர்மன் மற்றும் சீனா ஆகிய பிரதான சந்தைகளில் இருந்து வருகைதந்த அதிதிகளின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.:

பிராதான சந்தைகள்	வருகை
இந்தியா	**89,357**
ஐக்கிய இராச்சியம்	**55,455**
இரசியா கூட்டரசு	**49,397**
ஜேர்மன்	**34,507**
சீனா	**26,147**

ஏனைய நாடுகளில் இருந்து வருகை	252,448
மொத்த வருகை	**507,704**

COVID 19 தொற்று நோய் காரணமாக செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய 2020 ஆண்டிற்காக திட்டமிடப்பட்டு இருந்த அநேகமான விழாக்கள் இரத்து செய்யப்பட்டமையினால் அமுல்படுத்த முடியவில்லை. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

உலகளாவிய வர்த்தக கண்காட்சிக்காக இலங்கை பங்கேற்றல்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் ஆண்டின் முதலாவது காலண்டுக்குள் உரிய தூதுப் பணி சபையின் ஒத்துழைப்புடன் போக்குவரத்து உட்பட 27 சுற்றுலாக் கண்காட்சிகளில் வெற்றிகரமாக பங்கேற்றது. இப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாக் கண்காட்சி, சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வழங்கப்படும் அனைத்து உற்பத்திகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்காக சுற்றுலாக் கைத்தொழிலுக்கு சிறந்த தளமாக அமைந்தது. ஐக்கிய அமெரிக்கா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, மற்றும் ஆசிய நாடுகளில் வர்த்தக கண்காட்சிகள் நடைபெற்றன.

ஐரோப்பா ஐக்கிய இராச்சியம் - 2, ஜேர்மன் -1, இதாலி -1, டென்மார்க் -1, நேர்வே -1, நெதர்லாந்து -1, லக்ஸம்போர்க் - 1, பெல்ஜியம் - 1, சுவிஸர்லாந்து – 1, பின்லாந்து – 1, செக் குடியரசு – 1, ஸ்பெய்ன் - 1, எக்ஸ்தோனியாவ – 1, லிதுவேனியா – 1.

ஆசியா இந்தியா -3, தாய்லாந்து -1, பிலிபைன் -1, சீனா –1, ஜப்பான் -1

அமெரிக்கா அமெரிக்கா -1

மத்திய கிழக்கு டுபாய் i (1), இஸ்ரேல் (1)

அவுஸ்திரேலியா அவுஸ்திரேலியா -1

- **ஒஸ்லோ சந்தை, நேர்வே**

  2020 ஜனவரி 04 – 05

நேர்வே சுற்றுலா கண்காட்சி (Reiselivsmessen) என்பது ஸ்கன்டினேவியா வலையத்தின் பிரபல்ய மற்றும் முக்கயித்துவம் வாய்ந்த சர்வதேச மாநாடு நடைபெறும் இடமாகும். 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கண்காட்சி 2020 ஆம் ஆண்டு ஜனவரி 04 தொடக்கம் 05 வரை ஒஸ்லோ “டி ஹப்” இல் கிலரியன் ஹோட்டலில் நடைபெற்றது. இவ் உலகளாவிய வழாவைப் பார்வையிட 22,000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர், 500 கண்காட்சியாளர்கள் மற்றும் ஊடாக தரத நிர்ணய நிறுவனங்கள் 200 அதிகமான எண்ணிக்கையினரை கவர்சிக்கு உட்படுத்த முடிந்தது.





- **Vakantiebeurs சுற்றுலாக் கண்காட்சி, நெதர்லாந்து**

2020 ஜனவரி 15 – 19

Vakantiebeurs சுற்றுலாக் கண்காட்சி என்பது ஒல்லாந்தர் சந்தையின் மிகப்பொரிய சுற்றுலாக் கண்காட்சி என்பதுடன் அதன் முதல் இரண்டு நாட்கள் வர்த்தக தினமாகவும் எஞ்சியய நாள் வாடிக்கையாளர் தினமாகவும் அழுல்படுத்தப்பட்து. இலங்கையில் 2020 ஆம் ஆண்டில் 50 ஆவது கண்காட்சியில் பங்கேற்றதுடன் இதன் போது இலங்கை கண்காட்சிக் கூடம் 100 சதுர மீற்றரைக் கொண்ட கலாச்சார குழு மற்றும் தேநீர் கவுன்டரை உள்ளடக்கியதாக கண்காட்சி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கண்காட்சிக் கூடத்தில் மேலும் புதிய அதிதிகளை கவர்சிக்கு உட்படுத்துவதற்காக பிரவேச அனுமதிப்பத்திர மற்றும் பிரவேசப் பத்திர அலுவலகத்தில் அதிவிஷேடமாக அடையாள சின்னம் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இதற்காக 100,797 அதிதிகள் மற்றும் 12,925 தொழில்சார் ஊழியர்கள் வருகை தந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் 124 நாடுகளினால் 1,106 கண்காட்சியாளர்கள் பங்கேற்றனர்.



- **தாய் சர்வதேச சுற்றுலா கண்காட்சி (TITF) இ தாய்லாந்து**

2020 ஜனவரி 16 – 19

தாய்லாந்து சுற்றுலா அதிகார சபையின் ஒத்துழைப்புடன் (TAT) தாய்லந்து சுற்றுலா முகவர் சங்கம் (TTAA) இனால் ஒழுங்கு செய்யப்பட்ட தாய் சர்வதேச சுற்றுலாக் கண்காட்சி (வுஜவுகு) தாய்லாந்தின் மிகப்பெரிய திறந்தவெளி சந்தையாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் நீண்ட பௌத்த வரலாறுகள் காணப்படுகின்றமை மற்றும் அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த உரிய இடங்கள் தொடர்பாக தாய் அதிதிகளுக்கு இடையே விளக்கம் மற்றும் ஆவர்வத்தினை ஏற்படுத்துவதற்காக சுற்றுலாத்துறையின் 12 அங்கத்தவர்களுடன் வுஜவுகு 2020 இற்காக இலங்கை பங்கேற்றது. நாட்டின் ஏனைய கவர்சிக்குரிய இடங்களின் பல்வகைத் தன்மையும் இதன் மூலம் சித்திரித்துக் காண்பிக்கப்பட்டது.





- **New York Times Travel Show,**

  2020 ஜனவரி 24 - 26

நிவ்யோர்க் டைம்ஸ் சுற்றுலா கண்காட்சி, சுற்றுலா கைத்தொழில் மாநாடு, வாடிக்கையாளர் கருத்தரங்குகள் பேன்றன உள்ளடங்கிய வட அமெரிக்காவின் மிகப்பெரிய மற்றும் நீண்ட காலம் அமுல்படுத்தப்படும் வர்த்தக மற்றும் நுகர்வோர் சுற்றுலா கண்காட்சியாகும். 17 ஆவது நிவ் யோாக் டைம்ஸ் சுற்றுலா கண்காட்சி நிவ் யோர்க் ஜேகோப் கே ஜாவிட்ஸ் மத்திய நிலையத்தில் 2020 ஜனவரி 24 தொடக்கம் 26 வரை நடைபெற்றது. 175 நாடுகளைப் பிரதிநித்துவப்படுத்தி 700 கண்காட்சியாளர்கள் மற்றும் 17 கண்காட்சிகளில் பங்கேற்பு இடம்பெற்றது. ஏற்பாட்டாளர்களுக்கு அமைய சுற்றுலா கைத்தொழில்சார் பங்கேற்போர் 34,105 கண்காட்சிக்கு வருகைதந்தனர். இவர்களில் 11,041 சுற்றுலா வர்தகத்தில் ஈடுபட்டோர் என்பதுடன் 22,974 வாடிக்கையாளர் ஆகும்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தினால் மேற்கூறப்பட்ட கண்காட்சிக்காக இலங்கையின் பங்கேற்பு ஒழங்கு செய்யப்பட்டது. வொசிங்டன் டிசீயின் இலங்கை தூதராக அலுவலகம் இலங்கையின் பங்கேற்பினை ஒழுங்கு செய்யும் இணைப்புப் பணிகளை மேற்கொண்டது.




- **பேரியன் பெயார், அவுஸ்திரேலியா**

  2020 ஜனவரி மாதம் 16 – 19

2020 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை ஒஸ்ரியா வியானாவில் இடம்பெற்ற Ferrein-Messe Wien 2020 சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை பங்கேற்றது. அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுக் குழுவினர் ஊடான இணைப்பின் மூலம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB) இலங்கை கம்பனிகளின் பங்கேற்பு மற்றும் நிதியாக்கத்திற்காக வசதிகள் வழங்கப்பட்டன. Ferrein-Messe Wien என்பது மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையின் பிரதான விழா என்பதுடன் அது அண்மித்த அடிப்படையில் 800 கண்காட்சியாளர்கள் மற்றும் 200,000 போர்களை கவர்ச்சிக்கு உட்படுத்த முடிந்தது. அவுஸ்திரேலிய இலங்கைத் துர்தரகம் மற்றும் நிரந்தர பிரதிநிதி கௌரவ சரோஜா சிரிசேன அவர்களினால் இலங்கை கண்காட்சிக் கூடத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான அதிதிகள் மற்றும் அழைக்கப்பட்டோர் முன்னிலையிலட சம்பிரதாய பூர்வமாக விளக்கேற்றி இலங்கை கண்காட்சிக் கூடம் திறக்கப்பட்டது.





- **Vakanz சுற்றுலாக் கண்காடசி, லக்சம்போர்க்**

2020 ஜனவரி 17 – 19

வாடிக்கையார் மற்றும் வர்த்தக கண்காட்சியான Vakanz Fair 29 "தீவக பயணக்கேந்திர" தொனிப்பொருளின் கீழ் 29 ஆவது தடவையாக நடாத்தப்பட்டதுடன் 250 இற்கும் மேற்பட்ட சுற்றுலா நிபுணர் எண்ணிக்கையினால் ஆயிரக்கணக்கான பயணக்கேந்திர மற்றும் பகேஜ் கண்காட்சி வளாகத்தின் 17,000 சதுர மீற்றர் வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.




- **Matka Nordic சுற்றுலா கண்காட்சி, பின்லாந்து**

2020 ஜனவரி மாதம் 17 – 19

MATKA 2020 வட ஐரோப்பாவின் மிகப்பெரிய சுற்றுலாக் கைத்தொழில் விழா, 2020 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை Messukeskus கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மத்திய நிலையத்திற்கு முழு உலக மக்களும் இணைந்து கொண்டனர். அழகான இலங்கை கண்காட்சிக் கூடத்தை பார்வையிடுவோரை வரழைப்பதற்கான மிக முக்கிய கவர்ச்சிகரமான இடமாகக் காணப்பட்டது. இலங்கை சுற்றுலா வர்த்தகத்திற்கு இச் சந்தையின் வளர்ச்சியினை மேம்படுத்துதற்கு வாய்ப்பினை வழங்கி தேசம் மற்றும் அதன் அதிசய அழகு உட்பட கவர்ச்சிமிக்க இடங்கள் தொடர்பாக அறிவுறுத்தி சுற்றுலாக் கண்காட்சி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.




- **FITUR, சர்வதேச சுற்றுலாக் கண்காட்சி ஸ்பெய்ன்**

2020 ஜனவரி மாதம் 22 – 26

ஸ்பெய்ன் இலங்கைக்கு சுற்றுலாப் பிரயாணிகளை உருவாக்கும் பிரதான வளர்ச்சியடைந்த சந்தை என்பதுடன் அதன் வளர்ச்சிக்காக காணப்படும் இயலுமைகளை இனங்கண்டு, சந்தைக்கு உரிய அனைத்து சுற்றுலா ஆக்கங்களையும் உள்ளடக்கி FITUR இல் கவர்ச்சிகரமான கண்காட்சிக் கூடத்தை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு அமைய இவ் ஆண்டில் இலங்கை சுற்றுலா கண்காட்சிக் கூடங்கள் So Srilanka என் தொனிப்பொருளில் காட்சிப்படுத்துவதற்காக விஷேடமாக உருவாக்கப்பட்டதுடன் அது ஸ்பெய்ன் சுற்றுலாப் பிரயாணிகளின் உயரிய வரவேற்பினைப் பெற்ற இலங்கையின் கரையோர, வனவள, மரபுரிமைகள் மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிப்பது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையைப் பிரதிநித்துவப்படுத்தி வர்த்தக கண்காட்சிக்காக பங்கேற்றோரின் எண்ணிக்கை 18 ஆகும். பிரான்ஸ் தூதரக அலுவலகம், பார்சிலோனா இன் கவுன்சல ஜெனரால் அலுவலகம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக:குவிப்புப் பணியகம் கண்காட்சியில் உத்தியோகபூர்வமாக பங்கேற்றது.





- **பயணக்கேந்தி ர நிலைய சுற்றுலாக் கண்சாட்சி, ஐக்கிய இராச்சியம்**

  2020 ஜனவரி மாதம் 30 – 26

இவ் ஆண்டில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் உதவியுடன் இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. கண்காட்சி 2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி தெடாக்கம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை இலண்டன் ஒலிம்பியாவில் நடைபெற்றது. 05 கைத்தொழில் கம்பனிகள் இக் கண்காட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.






- **World Travel Market (WTM) Virtual Fair, UK**

  2020 நவம்பர் 9 - 11

இலங்கை சுற்றுலா கைத்தொழில் மற்றும் துறையின் பங்கேற்புடன் இணைந்து World Travel Market (WTM) -Virtual- UK Fair 2020 இற்கான பங்கேற்பு இடம்பெற்றது. இணையத்தள சுற்றுலாக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி உட்பட WTM பிரயோக விழா 2020 நவம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 2020 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை கீரீன்வீச் நேரம் மு.ப. 7 மணி தொடக்கம் மு.ப. 10.00 மணி வரை நடைபெற்றது.

இவ் ஆண்டில் சுற்றுலாக் கைத்தொழிலின் பிரதான விழாவாக இது அமைந்தது. உண்மையாக நடைபெறுவதினால் விழாவின் மாதிரி மாற்றமடைந்த போதிலும் WTM –Virtual Fair 2020 நேரடி கருத்தரங்கு அமர்வு மற்றும் கண்காட்சி தளம் வழங்கப்பட்டதுடன் அது போக்குவரத்து மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலின் மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்வது நோக்கமாகக் கொள்ளபட்டது.





- **வெளி சுற்றுலா வர்த்தக சந்தை இந்தியா**

2020 பெப்ரவரி மாதம் 03 – 05

இந்தியா மும்பாய் இல் அமைந்துள்ள Outbound Travel Mart (OTM) இல் சுற்றுலா கவர்ச்சியின் பல்வகைத் தன்மை மற்றும் ஓய்வாக நேரத்தைக் கழிக்கும் பல சந்தர்பங்கள் கொண்ட நாடாக சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்படுத்தும் இயலுமையினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக்கு முடிகின்றது. இந் நிகழ்வில் இலங்கையைப் பிரநிதித்துவப்படுத்தி இலங்கையின் பங்கேற்பு மும்பாயில் அமைந்துள்ள இலங்கை கவுன்சல் ஜனரால அலுவலகத்துடன் இணைந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இக் கண்காட்சியில் பங்கேற்கும் பிரதான நோக்கமாக அமைந்தது பயணக்கேந்திர நிலையத்தை ஊக்குவிப்பதைப் போன்று உள்நாட்டு கைத்தொழில் முகவர்களுக்கு B 2 B கூட்டம் ஊடாக இந்திய சுற்றுலா மற்றும் சுற்றுலா வர்த்தகப் பரதிநிதிகளை சந்திப்பதற்கு மற்றும் அவர்களின் வர்த்தக பங்குடமையினை விருத்தி செய்யும் தளத்தினை உருவாக்குதல், இந்திய மற்றும் இந்திய ஊடகங்கள் ஊடாக சுற்றுலாத் தொழிலாளர்களை சந்தித்தல் மற்றும் சுற்றுலாத்துறையில் அவர்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக புதிய சமகாலப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் இந்திய தரப்பினர்களுக்கு இலங்கையின் சேவைகளை வழங்குவதாகும். இது இந்திய சுற்றுலா புலகர்கள், ஊடகவியலாளர்கள், சுற்றுலா செயற்பாட்டாளர்கள் மற்றும் இந்திய செல்வந்தர்களில் இலங்கை மீது கவர்ச்சிக்கு உள்ளாகும் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.





- **SATTE, இந்தியா**

2020 ஜனவரி மாதம் 8 – 10

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2020 ஆம் ஆண்டிற்காக தமது முதலாவது வெற்றிகரமான பங்கேற்பு புதுடில்லி தெற்காசிய போக்குவரத்து போக்குவரத்து மற்றும் சுற்றுலா பறிமாற்றல் (SATTE) 2020 இல் மேற்கொள்ளப்பட்டது. மிகுந்த ரம்மியமான இலங்கையின் கண்காட்சிக் கூடம் நாட்டின் அழகினை காட்சிப்படுத்துவதுடன் கலாச்சார நடன நடனக் குழுவினர் பார்வையாளர்களின் கவர்ச்சியை மேலும் அதிகரிக்க காரணமாக அமைந்தது. இலங்கையை உலகின் முன்னனி சுற்றுலாக் கேந்திர நிலையமாக சித்திரித்துக் காண்பிப்பதற்கு மற்றும் இலங்கையை உலகின் முன்னனி சுற்றுலாப் பயணக்கேந்திர நிலையமாக கவர்ச்சிக்கு

உட்படுத்துவதற்கு மற்றும் இலங்கைக்கு கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தருவதை ஊக்குவிப்பதற்காக இந் நிகழ்வில் துறையின் 63 அங்கத்தவர்கள் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் தொடர்புபட்டனர். இலங்கை விமானக் கம்பனியும் இந் நிகழ்வில் பங்கேற்றது கூடுதலான வாய்ப்புக்கள் மற்றும் வரவேற்பினைப் பெற்றுக் கொள்வதற்காகும்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தமது புதிய ஊக்குவிப்பு செயற்பாடுகள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் திட்டங்கள் தொடர்பாக ஊடக மற்றும் மக்களை அறிவுறுத்துவதற்காக ஊடக சந்திப்பும் இம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவினைப் பலப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் இந்திய தரப்பினருக்கு இடையிலான வர்த்தக உறவினை பலப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் இந்திய தரப்பினருக்கு இடையே B 2 B கூட்டம் நடைபெற்றது. இந்திய சுற்றுலாப் பிரயாணிகள் தமது விடுமுறையினை கழிப்பதற்காக புதிய இடங்களைத் தேடுவதற்கு பெரும் ஆர்வம் காண்பிக்கின்றனர். இலங்கை கலைஞர்களினால் தமது உயரிய திறமைகளைக் காண்பித்து சமர்பிக்கப்பட்ட களியாட்ட கலாச்சார அனுபவங்கள் மூலம் இந்திய அதிதிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த காரணமாக அமைந்தது.





- **கலாச்சார மாலைப் பொழுது மற்றும் உயரிய மட்டத்திலான வலையமைப்பு அமர்வு பிலிபெய்ன்**

2020 பெப்ரவரி 05

“So Sri Lanka - ஒளிமிக்க தேசம்” தேசம் என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற PTAA சுற்றுலாக் கண்காட்சிக்கு முன்னர் உயரிய மட்டத்திலான வலையமைப்பு அமர்வு மற்றும் கலாச்சார மாலை ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கை கைத்தொழில் அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற வலையமைப்பு அமர்வில் உயரிய மட்டத்திலான தீர்மானங்களை எட்டும் 110 போர்களைக் கொண்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



- **PTAA சுற்றுலாக் கண்காட்சி, மனிலா, பிலிபெய்ன்.**

2020 பெப்ரவரி 07 – 09

PTAA Travel Tour Expo என்பது பிலிபைய்ன் உள்ளக மற்றும் வெளி சுற்றுலா சந்தைகளை ஊக்குவிக்கும் மிகப்பெரிய வருடாந்த கண்காட்சியாகும். PTAA கண்காட்சி மற்றும் ஊடக பங்குடமையாளர்கள் உட்பட பங்கேற்போரின் பட்டியல் ஊடாக எமது வலையமைப்பினை விரிவுபடுத்துவதற்கு, அதிதிகள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈபடுவோருடன் தொடர்புபடுவதற்கு இதன் மூலம் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. பிலிபைன் நாட்டவர்கள் மற்றும் பிலிபைன் வெளிநாட்டு குடியேற்ற வாசிகளுக்கு இடையே சுற்றுலா கேந்திர நிலையமாக இலங்கை தொடர்பில் கூடுதலான விளக்கத்தினை ஏற்படுத்துவற்கு வழிகள் திறக்கப்பட்டன. இலங்கையில் இருந்து துறைசார்ந்த ஐந்து அங்கத்தவர்கள் பங்கேற்றனர்..



- **Brussels விடுமுறைக் கண்காட்சி, பெல்ஜியம்.**

2020 பெப்ரவரி 06 – 09

Brussels விடுமுறைக் கண்காட்சி என்பது பெல்ஜியம் சந்தையின் மிகப்பெரிய வருடாந்த சுற்றுலாக் கண்காட்சி என்பதுடன் அது 350 இற்கும் மேற்பட்ட அளவு கண்காட்சியாளர்கள் மற்றும் 800 இற்கும் மேற்பட்ட பயணக்கேந்திர நிலையங்களை விட சேகரிக்கப்பட்டது. கண்காட்சிக்கான இடப்பரப்பானது 35,000 சதுர மீற்றர் பிரதேசம் பூராகவும் விரிவடைந்து காணப்பட்டதுடன் பார்வையாளர்கள் 100,000 இற்கும் மேற்பட்ட அளவினரைக் கவர்ச்சிக்கு உட்படுத்த முடிந்தது. இது 62 ஆவது கண்காட்சியின் கண்காட்சிக் கூடத்தை விட கூடுதலான பார்வையாளர்கை கவர்ச்சிக்கு உட்படுத்துவதற்காக இலங்கை கண்காடசிக் கூடம் கலாச்சார குழுக்கள் மற்றும் தேநிர் பகிரும் கருமபீடமும் அழகாக அமைக்கப்பட்டு இருந்தது.





- **BIT மிலான், இதாலி**

2020 பெப்ரவரி மாதம் 09 – 11

BIT Milan என்பது இதாலியின் மிகப்பெரிய மற்றும் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாக் கண்காட்சி என்பதுடன் அது புதிய கைத்தொழில் முன்னேற்றங்களுக்கு அமைய நடாத்தப்படும் தாக்கம் செலுத்தக் கூடிய சமூல் கருத்தரங்கு மற்றும் B 2 B கூட்டம் நூற்றிற்கும் அதிகமான அளவு அடங்கியுள்ளது. கண்காட்சியில் பங்கேற்ற இலங்கை சுற்றுலா வர்த்தக துறையின் பிரதான சுற்றுலாப் பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்களினால் இலங்கை சுற்றுலா வர்த்தகத் துறை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இதாலி சுற்றுலாப் பிரதிநிதிகள் சங்கத்தின் (ASTOI) வருடாந்த சபைக் கூட்டம் இவ் 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவதற்கு சுற்றுலா உத்தியோகத்தர்கள் மற்றும் தூதரக உத்தியோகத்தர்கள் கலந்துரையாடினர்.





- **சர்வதேச மத்திய தரைக்கடல் சுற்றுலா வர்த்தக சந்தை (IMTM), இஸ்ரேல்**

2020 பெப்ரவரி 11 – 12

இலங்கை சுற்றுலாக் ஊக்குவிப்பு பணியகத்தினால் இலங்கை தூதரக அலுவலகத்தின் பங்கேற்புடன் இஸ்ரேல் எக்ஸ்போ டெல் அவிவ் சர்வதேச சம்மேளன மத்திய நிலையத்தில் இடம்பெற்ற டெல் அவிவ்வின் 26 ஆவது சர்வதேச மத்திய தரைக்கடல் சுற்றுலா சந்தை (IMTM) 2020 இல் இலங்கையின் பங்கேற்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

IMTM என்பது இஸ்ரேல் சுற்றுலா அமைச்சின் அனுசரணையின் கீழ் இஸ்ரேலினால் நடாத்தப்படும் மிகப்பெரிய தொழில்சார் சுற்றுலாக் கண்காட்சியாகும். இது உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழிலின் சுற்றுலா தொழிலாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கான கூட்டத் தளமாக இது கருதப்படுவதுடன் வருகைதரும், உள்நாட்டு மற்றும் வெளி சுற்றுலா கைத்தொழில் ஊக்குவிக்கப்படுகின்றது. இது உலகம் பூராகவும் சுற்றுலா நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பினை பலப்படுத்துவதும் இதற்கான சந்தர்ப்பமாகும்.

The IMTM 2020 சுற்றுலாத் தொழிலாளர்கள் மற்றும் 50 மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூட்டப்பட்டனர். இது ஆசிய பசுபிக், ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் அமெரிக்க வலையமும் அடங்குகின்றது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் டெல் அவிவ் இல் இலங்கைத் தூதராக அலுவலகத்தின் உதவியுடன் IMTM இற்காக தொடர்ந்தும் வருடாந்த சந்திப்பு இடம்பெற்றது.









• உலக சுற்றுலாக் கண்காட்சி, பிராக், செக் குடியரசு

2020 பெப்ரவரி 13 – 16

ஹெலிடே வேர்ல்ட் என்பது செக் குடியரசு மற்றும் மத்திய ஐரோப்பிய வலையத்தின் முக்கிய சுற்றுலா மற்றும் போக்குவரத்து விழாவாகும். பிராக் இன் கவுன்சல ஜனரால் அலுவலகம் உள்நாட்டு சுற்றுலா நிறுவனங்களுடன் இம் முறை கண்காட்சியில் பங்கேற்றது. செக் சந்தை 2019 ஆம் ஆண்டில் 19% வளர்ச்சி வேகத்தை எட்டியதுடன், சந்தை மூலம் 20,000 சுற்றுலாப் பிரயாணிகள் பதிவு செய்யப்பட்டனர்.

இலங்கை சுற்றுலாப் பிரதிநிதிகளினால் புதிய சுற்றுலா அனுபவ தொடர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா பயண மார்க்கங்களில் மிகுந்த சமகாலப்படுத்தப்பட்ட கொடுப்பனவு கண்காட்சிக் கூடத்தின் உள்ள அதிகளினால் வழங்கப்பட்டது. கண்காட்சியின் 04 நாட்களுக்குள் அநேகமான ஊடவியலாளர்கள், புலகர்கர்கள், ஏனைய சுற்றுலாப் பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்கள் இலங்கை கண்காட்சிக் கூடத்திற்கு வருகை தந்தனர்.





• டென்மார்க் சுற்றுலாக் கண்காட்சி, டென்மார்க்

2020 பெப்ரவரி 21 – 23

ஸ்கண்டிநேவியாவில் பாரிய வாடிக்கையாளர் விடுமுறைக் கண்காட்சியான டென்மார்க் சுற்றுலாக் கண்காட்சி 1998 தொடக்கம் ஆண்டுதோரும் நடைபெறுவதுடன் அது 2020 பெப்ரவரி 21 தொடக்கட் 23 வரை டென்மார்க் ஹர்னிங் இல் ஆஊர் கண்காட்சி மத்திய நியைத்தில் இடம்பெற்றது. 2020 விடுமுறைக் கண்காட்சியின் போது 13 கண்காட்சி மண்டபங்களில் 1,100 இற்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்றதுடன், பல்வேறுபட்ட 45 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி கவர்ச்சிமிக்க நூறு பயணக் கேறந்திர நிலையங்களில் சுற்றுலா அனுபவம் வழங்கப்பட்டது. இலங்கையின் பல்வகைத்தன்மை, அலங்கார மற்றும் ஆக்கத்திறன்மிக்க தேசமாக முன்னேற்றகரமாக காணப்பட்டது.






- **CMT ஜேர்மன்**

2020 ஜனவரி 11 – 19

CMT 2020, ஜேர்மன் Stuttgart, இல் விடுமுறைக் கண்காட்சி, 2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை CMT சுற்றுலாக் கண்காட்சியில் 300,000 சுற்றுலாப் பிரயாணிகளை இலக்காகக் கொண்டு பார்வையாளர்களுக்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. 2,161 கண்காட்சியாளர்கள் 100 நாடுகளினாலும் மற்றும் 100 நாடுகள் உட்பட வலையங்கள் மற்றும் 360 நகரங்களினால் அவர்களின் சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகள் சமர்பிக்கப்பட்டன.

இலங்கையின் தேநீர் வழங்கும் கருமபீடம், இலங்கை உணவினை வழங்கும் கருமபீடம், புகைப்படக் கண்காட்சிக் கூடம் மற்றும் இலங்கை கலாச்சார இசைக் கச்சேரி மூலம் இலங்கையின் நிலைப்பாடுகள் அலங்காரமாக சமர்பிக்கப்பட்டன. இலங்கைக்கு கொரிடோ மேடையில் கலை நிகழ்வுகளை அரங்கேற்ஞவதற்கு வாய்ப்பு கிடைத்துடன் அது விழாவின் போது மிக முக்கிய கவர்ச்சியினை ஈர்க்கக் கூடியதாக அமைந்தது. இலங்கை அடையளஞ்ஞாள சின்னத்தை விழா வளாகத்திற்கு பிரவேசித்தல் உட்பட அனைத்து பிரதான நுழைவாயில்களிலும் பெருத்தப்பட்டு இருந்தன.





- **FESPO சூரிச் சுவிஸர்லாந்த**

2020 ஜனவரி 30 – பெப்ரவரி 2

FESPO 2020, 2020 ஆண்டில் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி வரை சுவிஸர்லாந்து சூரிச் இல் இடம்பெற்றது. FESPO என்பது 250 பயணக்கேந்திர நலையங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட சுற்றுலா உற்பத்தியினை ஊக்குவிக்கும் 600 கண்காட்சியாளர்களின் பங்கேற்புடன் சூரிச் இல் நடாத்தப்படும் வாடிக்கையாளர் கண்காட்சியாகும். இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு கண்காட்சியில் பிரபல்யததை வெற்றி கொண்டு அநோகமாக பார்வையாளர்களை கவர்ச்சிக்கு உட்படுத்த முடிந்தது. நடன இசைக்கலை, உணவு வழங்கள் கருமபீடம், மற்றும் இலங்கை தேநீர் வழங்கும் கருமபீடம் போட்டிகரமான பயணக்கேந்திர நிலையங்களில் இலங்கையின் கவர்ச்சியினை சித்தரித்துக் காண்பிக்க முடிந்தது.





• TOUREST 2020, எஸ்தோனியா

எஸ்தேனியாவில் பாரிய சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியான **TOUREST 1991** ஆண்டு தொடக்கம் எக்தோனியா சுற்றுலாப் பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்களின் சங்கத்தின் (ETFL) இனால் ஒழுங்கு செய்யப்படும் போல்டிக் நாடுகளில் பாரம்பரிய வர்த்தக கண்காட்சியாகும். அது சுற்றுலா துறையின் அனைத்து பிரிவுகளையும் தழுவ முடிவதுடன் சுற்றுலாவிற்கு உகந்த வாடிக்கையாளர்களை நேருக்கு நேர் சந்திப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளும் வினைத்திறன் மிக்க தளம் வழங்கப்படுகின்றது.

29 ஆவது தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட TOUREST 2020 இல் அதிதிகள் 26,863 இருந்ததுடன், அவர்களுக்கு 32 நாடுகளில் 473 கண்காட்சியாளர்களுடன் நெருங்கி செயற்படுவதற்கு கூடுதலான வாய்ப்புக்கள் காணப்பட்டன. சுவீடன் வதிவிட லிதுவேனியாவின் இலங்கை தூதுவர் சுதந்த கனேகம ஆரச்சி அவர்கள் மற்றும் எஸ்தோனியாவின் வெலோபாலுக்கான இலங்கையின் கௌரவ கவுன்சலர் ஜகத் பெரேரா ஆகியயோரினால் இலங்கை கண்காட்சிக் கூடம் திறக்கப்பட்டது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் மற்றும் இலங்கை சுற்றுலா வர்த்தக பிரதநிதிகளும் இதில் பங்கேற்றனர்.





• ADVENTUR அட்வென்சர் சுற்றுலாக் கண்காட்சி, லிதுவேனியா

2020 ஜனவரி 24 (வர்த்தக தினம்)

ADVENTUR என்பது லிதுவேனியா மற்றும் வெளிநாடுகளின் சுற்றுலாப் பிரதிநிதிகள் ஒன்று கூடிய போல்டிக் குடியேற்றங்களின் மிகப்பெரிய விஷேட சுற்றுலாக் கண்காட்சியாகும். மேலும், அது சுற்றுலா சாகச நிகழ்வுகளுக்கான புதிய பயணக்கேந்திர மற்றும் மார்க்கத்தினை திறந்துவைத்த நிகழ்வாகும். 2020 ஆம் ஆண்டில் அதி கூடுதலான கண்காட்சியாளர்கள் இங்கு வருகைதந்திருந்தனர். 320 கண்காட்சிப் பிரதிநிதிகளுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடன் 29,500 பேர் கண்காட்சியைப் பார்வையிட வருகைதந்திருந்தனர்.

இலங்கை கண்காட்சிக் கூடத்தின் கண்காட்சியில் அனைவரினதும் கவர்ச்சியினை ஈர்க்கச் செய்யதமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் ரம்மியமான அலங்கார அடையாளங்கள், நாட்டின் பிரதான சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்களை காட்சிப்டுத்தும் வகையில் தொல் பொருள், உற்சவங்கள், விழாக்கள் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய சுற்றுலா உற்பத்தி தொனிப் பொருள் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலாக் கூடத்தை திறந்து வைக்கும் விழா முதல் தினமான 2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 24 ஆம் திகதியான சுற்றுலா வர்த்தக தினத்தில் இடம்பெற்றது. லிதுவேனியாவின் இலங்கைத் தூதுவர், சுவீடன் வதிவிடப் பிரதிநிதி சுதன்த கனேகம ஆரச்சி அவர்கள் மற்றும் லிதுவேனியாவின் இலங்கை கௌரவ கவுன்சலர் எலிஜஸ் பர்கிஸ் அவர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா வர்த்தக பிரதிநிதிகள் உட்பட வர்த்தக முகவர்களினால் இலங்கை கண்காட்சிக் கூடம் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கைக்கு வருகைதர எதிர்பார்க்கும் பல்லாயிரக்கனக்கான சுற்றுலாப் பிரயாணிகள், ஊடகவியலாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்கள், சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்கள், விஷேடமாக ஆயுர்வேத வைத்தியம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் இலங்கையின் தேயிலையின் சுவை சுவைப்பதற்கும் இலங்கை கண்காட்சிக் கூடத்திற்கு வருகை தந்திருந்தனர்.





- **சீன சர்வதேச சுற்றுலா வர்த்தக சந்தை, யாதார்தபூர்வமான கண்காட்சி, சீனா**

2020 நவம்பர் 16 – 18

2020 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை சீனாவின் சன்ஹை நிவ் இன்டநர்சனல் எக்ஸ்போ சென்டர் இல் நடைபெற்ற சைனா இன்டநசனல் டரவல் மாட் (CITM - 2020) இல் 5 ஆவது யாதார்த்தபூர்வமான நிழச்சியில் இலங்கை பங்கேற்றதுடன் அதில் கண்காட்சியின் முதல் இரண்டு நாட்கள் வர்த்க செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டதுடன் மூன்றாது மற்றும் இறுதித் தினம் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. முன்னோடிக் குழுக்களின் திறமைகள், புத்தாக்கத்துடன் இம் முறை உண்மையான சுற்றுலாக் கண்காட்சி - இவ்வாறு முதலாவது உலகளாவிய கண்காட்சியாக முன்னனியில் காணப்பட்டது.

உலகளாவிய கொள்வனவாளர்களுடன் டீ 2 டீ சுற்றுலா வர்த்தகத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று ஏனைய அனைத்து இணை – கண்காட்சிகளுடன் இலங்கை இதில் பங்கேற்றது.


ஆரம்பத்தில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் பிரவேசத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை சுற்றுலா மற்றும் அனுசணை வழங்கும் 84 வர்த்தக செயற்பாடுகளுக்காக ஆறுமாதங்கள் வரை இவ் ஒன்லைன் கண்காட்சிக்கு பிரவேசிக்க முடியும். சீன சுற்றுலா முகவர்கள் கூடுதலாக இணைவதனால் உலகம் பூராகவும் பங்கேற்ற சுற்றுலா வர்த்தகத்திற்கு சீனாவில் இருந்து கூடுதலான வர்த்தக வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்களினால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.



China International Travel Mart - Virtual Fair



SLTPB Stall -CITM



Virtual Experience - CITM

வர்த்தக செயற்பாடுகளை நெருக்கமாக்கும் சுற்றுலா

• நெருக்கமாக்கும் சுற்றுலா – ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்

2020 பெப்ரவரி 13 – 19

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஸ்ரீ லங்கள் விமானக் கம்பனியுடனான ஒத்துழைப்புடன் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை உயர்மட்ட சுற்றுலாப் பிரதிநிதிகள் ∴ சுற்றுலா செயற்பாட்டாளர்கள் 8 பேருக்கு அனுசரணைகளை வழங்கி ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் சுற்றுலா செயற்பாட்டாளர்களுக்கு இடையே இலங்கையின் உற்பத்தி தொடர்பான அறிவுறுத்தல்களை விருத்தி செய்வதற்கான கேந்திர நிலைய சுற்றுலா ஊக்குவிப்பு நெருக்கமாக்கும் வேலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி செயலமர்வு மற்றும் டீ 2 டீ கூட்டம் நடைபெற்றது. SLAITO, THASL, மற்றும் ASMET ஆகிய சுற்றுலா சங்கத்தின் மூன்று பிரதிநிதிகளினால் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.





• நெருக்கமாக்கும் சுற்றுலா – சுவீடன்

2020 மார்ச் 09 – 14

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மற்றும் சுவீடனின் இலங்கை தூதரக அலுவலகம் எமிரேட்ஸ் உடனான ஒத்துழைப்புடன் மார்ச் மாதத்தில் 6 நாட்கள் சுற்றுலாவிற்காக சுவீடன் சுற்றுலாக முகவர்கள் ஒன்பது பேருக்காக சுற்றுலா வர்த்தக செயற்பாடுகளை நெருக்கமாக்கும் சுற்றுலா வேலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது சுற்றுலா செயற்பாட்டாளர்களுக்கு இடையே இலங்கையின் ஆக்கங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களை விருத்தி செயயும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.



- **நிலத்திற்குக் கீழ் வர்த்தக பிரச்சார செயற்பாடுகள், இலண்டன், ஐக்கிய இராச்சியம்**

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டனில் மூன்று மாதங்கள் பூராகவும் 10 இடங்களில் (2020 ஜனவரி தொடக்கம் 2020 மார்ச் வரை) நிலத்திற்குக் கீழ் வர்த்தக பிரச்சார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இப் பிரச்சார செயற்பாடுகள் இலண்டனில் 10 இடங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்த விளம்பர பிரச்சார பலகைகளின் எண்ணிக்கை 18 ஆகும்.





இலங்கை வெளிநாட்டு துது சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயற்பாடுகள்

- **ஐக்கிய இராச்சியத்தில் சுதந்திர தின விழாத**

இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம்.

இலண்டன் நகரில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டன் நகரில் 72 இடங்களில் சுதந்திர தின விழா நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவ் வரவேற்பு விழாவின் பிரதான நோக்கமாக அமைந்தது சாமி உறுப்பினர் சபையின் அங்கத்தவர்கள், பெர்துச் சபை உறுப்பினர் சபையின் அங்கத்தவர்கள், பிரித்தானிய அரசின் உத்தியோகத்தர்கள், வர்த்தக சமூகம், ஊடக மற்றும் சுற்றுலாப் பிரதநிதிகள் உட்பட பங்கேற்ற 220 போர்கள் மத்தியில் இலங்கையை சுற்றுலாக் கேந்திர நிலையமாக ஊக்குவிப்பதாகும். இவ் விழாவினை அழகுபடுத்துவதற்காக இலங்கை உணவு விழா மற்றும் களியாட்ட செயற்பாடுகளை ஒழுங்கு செய்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் இந் நிகழ்விற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





- **ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தின் சுற்றுலா வலையமைப்பு அமர்வு**

டுபாய் மற்றும் அபுடாபியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை சமூகம் உட்பட சுற்றுலாத்துறைகளின் பிரபுக்கள், இராஜதந்திரிகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தீர்மானம் எடுப்போர், சுற்றுலா முகவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர். இதற்காக விரிவான ஊடக அனுசரணை வழங்கப்பட்டது.



- **செய்தியாளர் மாநாடு – ஜப்பான்**

பிரதான ஜப்பான் ஊடக மாநாடு பங்கேற்பு

இலங்கை தூது சபையினால் 2020 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை Fukuoka சுற்றுலா கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டதுடன் 2020 பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி டோகியோ நகரின் ஊடகவியலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பிரயாணிகள் 70 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் பங்கேற்ற செய்தியாளர் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.





- **சமையல் கலை விழா மற்றும் பட்டம்விடும் விழா – அவுஸ்திரேலியா**

இலங்கை துதுச் சபையுடன் இணைந்து உலக சிறுவர் தின விழா நிகழ்வு

ஒஸ்ரியாவின் இலங்கை தூதரக அலுவலகம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் (SLTPB) உடன் இணைந்து 2020 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி உலக சிறுவர் தினம் அலங்காரமாக கொண்டாடப்பட்டது ஒஸ்ரியாவில் வசிக்கும் பிள்ளைகள் மற்றும் இலங்கை பிள்ளைகளின் பங்கேற்புடன் சிறுவர் தின நிகழ்வுகள் அலங்காரமாக கொண்டாடப்பட்டன. கவர்ச்சிமிக்க பட்டம் ஏற்றும் விழாவும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இது வியானா Steinhofgrunde, இல் இடம்பெற்றது.

இலங்கை தொடர்பாக அவர்களின் உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் பட்டங்களை அழகுபடுத்தும் செயற்பாடுகளில் பங்கேற்பதன் ஊடாக பிள்ளைகளுக்கு பொருத்தமான அக்கத்திறனை வெளிப்படுத்துவதற்கு இந் நிகழ்வின் மூலம் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

வியானாவில் Steinhofgrunde பூங்காவில் திறந்தவெளி சிறுவர் செயற்பாடுகளுக்காக பிரபல்யம் வாய்ந்த இடமாகக் காணப்படுவதுடன் இந் நிகழ்வு உள்நாட்டு ஒஸ்ரியா நாட்டவர்களின் பெரும் எண்ணிக்கையானோரைக் கவர்ச்சிக்கு உட்படுத்த முடிந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வு இளைஞர், முதியோர் ஆகிய இரு தரப்பினருக்கும் ஒன்று கூடக் கூடிய வாய்ப்பு கிடைத்ததுடன், ஒவ்வொருவருடனும் நெருக்கமாக பழகுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. இந் நிகழ்விற்கு சுவையினை சேர்க்கும் வகையில் இலங்கை பிபல்ய பாரம்பரிய உணவுவகளை சுவைப்பதற்கும் பார்வையாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.





• ஒன்லைன் வட்டமேசை மாநாடு – இரசியா

இரசியா சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது.

இரசிய சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கத்தின் அழைப்பின் பேரில் இரசியாவிற்கான இலங்கைத் தூதரக அலுவலகம் உத்தியோகத்தர்கள் 2020 ஜுலை மாதம் 09 ஆம் திகதி மொஸ்கோவில் இடம்பெற்ற வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றனர். இக் கலந்துரையாடல் இரசிய சுற்றுலா செயற்பாட்டாளர்கள் மற்றும் இக் கைத்தொழிலின் 260 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பிரதநிதகள் ஊடகங்களுடன் இணைந்திருந்தனர்.

• நைல் தொலைக்காட்சி இலங்கை – எகிப்திற்கான உலகளாவிய அடிப்படையிலான சமர்பிப்புக்கள்

இலங்கை சுற்றுலா வர்த்தக மத்திய தரைக்கடல் சுற்றுலாப் பிரயாணிகளை கவர்ச்சிக்கு உட்படுத்தல்.

இலங்கை சுற்றுலா வர்த்தகம், சமூக ஊடகங்கள் மற்றும் யதார்த்தபூர்வ தளங்கள் நாட்டின் பயணக்கேந்திர நிலையத்தை ஊக்குவிப்பதனை பிரதான அம்சமாகக் கருதி தொற்று நோய் நிலமையாக மாற்றியமைத்து அதன் அநேகமான கவர்ச்சிமிக்க இடங்கள் மற்றும் வளங்களின் கவாச்சியின் உள்ளடக்கத்தின் ஊடாக பகிரப்பட்டன. இம் முயற்சியின் பயணாக மத்திய தரைக்கடல் சுற்றுலாப் பிரயாணிகளை நேரடியாக கவாச்சிக்கு உட்படுத்துவதற்கு இவ் விஷேட சந்தர்பத்தினை உயாந்தபட்சம் பயண்படுத்தி கைரோவிற்கான இலங்கைத் தூதரக அலுவலகத்தின் வழிகாட்டலுடன் நைல் ரீவீ சர்வதேச அலைவரிசையினை பயணக்கேந்திர நிலையத்தை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தில் பங்கேற்பதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு வர்த்தகத்திற்கு முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஒத்துழைப்பின் நோக்கமாக அமைந்தது மத்திய தரைக் கடல் சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கையின் நாமத்துடன் உண்மையாகவே இணைந்து கொள்வதனை ஊக்குவித்தல் மற்றும் அதிதிகளுக்காக எல்லைப் பிரதேசத்தை திறந்தததைப் பின்னர் இலங்கை அவர்களின் "பார்வையிட வேண்டிய சுற்றுலாப் தளம்" கேந்திர நிலையமாக பேனுவதற்கு நேர்மனப்பாங்கு மிக்க அனுபவங்களைப் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதாகும்.

இவ் வேலைத்திட்டத்தின் மூலம் 2020 நவம்பர் 09 ஆம் திகதி இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் கிமாலி பிரனாந்து அவர்களுடன் விஷேட நேர்காணல் நடாத்தப்பட்டதுடன் எகிப்து நைல் தொலைக்காட்சியில் கீர்த்திமிக்க அனுசரணையாளாரான டக்ரீட் ஹாசைனினால் அதற்கு அனுசரணை வழங்கப்பட்டது.





Ms.Taghreed Hussein interviewing Ms. Kimarli Fernando, Chairperson Sri Lanka Tourism, on the live programme via Skype


- **“நாம் சுற்றுலா மேற்கொள்ள அசைப்படுகிறோம்” மன்றம் – ஜேர்மன்**

ஒன்லைன் சுற்றுலா மன்றம்

பர்லிங்கிற்கான இலங்கைத் தூதுவர் அலுவலகத்தினால் 2020 ஆண்டில் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட “We Love Travel’ ஒன்லைன் சுற்றுலா மன்றத்தை இலங்கை பிரதிநித்துவதப்படுத்தியது. கொவிட் 19 காலத்திற்குள் ஜேர்மன் சுற்றுலா செயற்பாட்டாளர்கள், சுற்றுலா முகவர்கள், ஜேர்மன் ஊடகங்களுக்கு இடையே சுற்றுலா வர்த்தகம் தொடர்பில் சமாகாலப்படுத்தல்களை மேற்கொள்ளல் உட்பட இலத்திரணியல் சஞ்சிகை (ஜர்மன் மொழி) விநியோகிக்கப்பட்டது.











- **இலங்கை – தாய்லாந்து பௌத்த வழிகாட்டல்களை ஊக்குவித்தல்**

தாய் சுற்றுலா குறிப்பின் ஊடாக

தாய்லாந்தில் வாழும் பெரும் எண்ணிக்கையிலான பௌத்த சமூகத்திற்கு இலங்கையின் மரபுரிமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் தாய் வாசகர்களுக்கு இடையே கீர்த்திமிக்க எழுத்தாளாரான பாலொப் கிரிடயனசார்ஜ் இனால் எழுதப்பட்ட "இலங்கை சுற்றுலா கவிதை" என்ற சுற்றுலா குறப்புப் புத்தக்கத்தை வெளியிடுவதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தினால் உதவிகள் வழங்கப்பட்டன.





சுற்றுலா இணையத்தள கருத்தரங்கு

இலங்கை சுற்றுலா வர்த்தகத்தின் மூலம் இலங்கை தூதுக் குழு சபை மற்றும் SLAITO, THASL மற்றும் ASMET ஆகிய பிரதான சங்கங்களுடனா பங்கேற்புடன் பிரதான சந்தைகளில் இணையக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இணை கருத்தரங்குகளின் நோக்கமாக அமைந்தது பிரதான சர்வதேச ஊடகங்கள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டவைகள் தொடர்பாக தொடர்புசாதன செயற்பாடுகளை மேற்கொள்வதாகும்.

ய. சுகாதார அமைச்சுடனான ஒத்துழைப்புடன் உலகளாவிய தொற்று நோய்த் தாக்கங்களை இலங்கை வெற்றிகரமாக முகாமைத்துவப்படுத்தக் கூடிய முறைகள் மற்றும் கொவிட் 19 இற்குப் பின்னரான சூழலில் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பிராணிகளின் பர்துகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் எவை என்பது தொடர்பாக.

டி. தொழில்நுட்ப அறிவுடன் இலங்கை சுற்றுலா கேந்திர நிலையத்தின் பல்வகைத் தன்மை மற்றும் அடையாளங்கள் தொடர்பில் மிகுந்த விரிவான, சிறந்த விளக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய முறைகள் மற்றும் இலங்கையை மிகவும் விரும்பிய விடுமுறைக் கேந்திர நிலையமாக அடையாளப்படுத்தி அதன் இணையற்ற சுற்றுலா உற்பத்திகளை உலகளாவிய சுற்றுலாவிற்கு மிகவும் விருப்பமான சமூகத்திற்கு முன்னைவைக்கக் கூடிய முறைகள் தொடர்பாக.

இம் மூலுபாயம் இருதரப்பு தகவல்களை தொடர்புசாதனப்படுத்துவதற்காக, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் இரசியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், நேர்வே, சவீடன் மற்றும் போல்டிக் வலையங்களின் பிரதான இணையக்கருத்தரங்கு வினைத்திறன்மிக்கதாக ஒழுங்கு செய்யப்பட்டது.

இரசியா

இரசியா சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கம; (ATOR) இனால் 2020 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அவர்களின் ஒன்லைன் தளத்தின் ஊடாக இணையத்தளக் கருத்தரங்கு இற்காக அனுசரணை வழங்கப்பட்டது. இதன் போது இரசியா, யுக்ரேன், பெலரூஸ், ஜோர்ஜியா, உஸ்பகிஸ்தான் மற்றும் ஈரான் உ ள்ளிட்ட ஆறு நாடுகளினால் இருபத்து மூன்று நரகங்களை தழுவக் கூடிய வகையில் சுற்றுலா செயற்பாட்டாளர்கள் மற்றும் 126 சுற்றுலா முகவர்களைக் கொண்ட குழுவினர் பதிவு செய்யப்பட்டனர்.

வினாக்கொத்து அமர்வு வேலைத்திட்டம் நிறைவடைந்ததுடன் பிரதானமாக கொவிட் 19 வழிகாட்டல் ஆலோசனை தொடர்பில் இரசிய சுற்றுலா செயற்பாட்டாளர்களினால் விரிவான பரம்பலில் கேள்விகள் எழுப்பப்பட்டதுடன் அதற்கு திருப்பதிகரமான முறையில் பதில்களை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ் இணையத்தள கருத்தரங்கின் பிரதான சமர்பிப்பாக அமைந்தது இரசிய கூட்டரிசின் இலங்கைத் தூ துவர், பேராசியர் எம்.டி. லமாவங்ச அவர்கள், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் (SLTPB) தலைவி திருமதி கிமாலி பிரனாந்து அவர்கள், பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), திரு துசான் விக்ரமசிங்க அவர்கள் இலங்கை உள்நாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர்களின் சங்கம் (SLAITO) தலைவர் மஹேன் காரியவசம் அவர்கள், இலங்கை ஹோட்டல் சங்கத்தின் (THASL) தலைவர் திரு சனத் உகவத்தை அவர்கள், சுற்றுலா , சிறிய மற்றும் நடுத்தரளவ தொழல்முயற்சியாளர் சங்கத்தின் (ASMET) முன்னாள் தலைவர் திரு மர்வின் பிரனாந்துபுல்லே அவர்கள் மற்றும் இரசிய பெரல சுற்றுலா முகவர் நிறுவனத்தின் (Rosturizm) சர்வதேச ஒத்துழைப்புத் திணைக்களத்தின் பொறுப்பாளர் திரு டெம்யான் ஸ்மைல்வேல்ஸ் அவர்களாகும்.

ஸ்கெண்டிய வலையம்

PATA பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் கலாநிதி மாரியோ ஹாட், சவீடன், மென்மார்க், எஸ்தோனியா, லட்வியா மற்றும் லிதுவேனியா ஆகிய நாடுகளின் இலங்கைத் தூதுவர் சுதன்த கனேகம ஆரச்சி அவர்கள், நேர்வே மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளின் இலங்கைத் தூதுவர் கொட்பிரி குரே அவர்கள், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் தலைவி திருமதி கிமாலி பிரனாந்து அவர்கள் மற்றும் PATA சுவீடன் தரப்பின் பொறுப்பாளர்கள், ANTOR நோர்வேயின் பொறுப்பாளர்கள் மற்றும் THASL, SLAITO மற்றும் ASMET இன் இலங்கை சுற்றுலா சங்கம் பொறுப்பாளர்களின் பங்கேற்புடன் ஸ்கன்டிநேவியா வலையத்திற்கான சுற்றுலா இணைய கருத்தரங்கு PATA மண்டபத்தில் நடைபெற்றது.

.





ஐக்கிய இராச்சியம்

